# பெருநகர சென்னை மாநகராட்சி
# தேர்தல் செய்தி வெளியீடு

**தே.செ.வெ.எண். 02** **நாள் : 26.11.2017**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி காவல்துறை சட்ட ஒழுங்கு பார்வையாளராக திரு. இம்மானுவேல் கே. முய்வா இ.கா.ப அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர் .இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி சென்னை மாவட்டத்தற்குட்பட்ட எண் 11 டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்ட மன்ற தொகுதிக்கு வருகின்ற 21.12.2017 அன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் தொடர்பான நிகழ்ச்சிகளின் அட்டவனை பின்வருமாறு

| நிகழ்வுகள் | நாள் |
|---|---|
| வேட்பு மனுதாக்கல் துவக்க நாள் | 27.11.2017 (திங்கட்கிழமை) |
| மனுதாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 04.12.2017 (திங்கட்கிழமை) |
| வேட்பு மனு பரிசீலனை | 05.12.2017 (செவ்வாய்கிழமை) |
| வேட்புமனுவினை பெறுவதற்கான கடைசி நாள் | 07.12.2017 (வியாழக்கிழமை) |
| தேர்தல் நாள் | 21.12.2017 (வியாழக்கிழமை) |
| ஓட்டு எண்ணிக்கை நாள் | 24.12.2017(ஞாயிற்றுக்கிழமை) |
| தேர்தல் நடவடிக்கைகள் இந்த நாளுக்கு முன்பாக முடிவுறும் நாள் | 26.12.2017(செவ்வாய்கிழமை) |

இந்த தேர்தலை முன்னிட்டு காவல்துறை சட்ட ஒழுங்கு பார்வையாளராக திரு. இம்மானுவேல் கே முய்வா இ.கா.ப அவர்கள் நியமிகப்பட்டுளளார். அவர்கள் நேற்று சென்னை வந்துள்ளார். அவருடைய கைபேசி எண்: 9445071061.

எண் 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்ட மன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு கே. வேலுச்சாமி இணை இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர், அவருடைய கைபேசி எண்: 9498014100. உதவி தேர்தல் நடத்தும் அலுவலராக திரு எஸ். முருகேசன், வட்டாட்சியர் தண்டையார்பேட்டை வட்டம் கைபேசி எண்: 9445000484 மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலராக திரு. ஆர். சுப்பிரமணியன் தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் தண்டையார்பேட்டை வட்டம் அவருடைய கைபேசி எண்: 9842029246.

நாளை 27.11.2017 வேட்பு மனு தாக்கல் துவங்கவுள்ளது. வேட்பு மனுக்களை வேட்பாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டல அலுவலகத்தில் உள்ள எண் 11 டாக்டர் இராதாகிருஷ்ணன் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடமோ அல்லது உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடமோ காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அளிக்கலாம். வருகின்ற 2.12.2017 (சனிக்கிழமை) மற்றும் 3.12.2017 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் விடுமுறை நாளானதால் வேட்டுமனுக்கள் பெறப்படமாட்டாது. வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 04.12.2017. வேட்புமனுக்கள் 05.12.2017 அன்று பரிசீலனை செய்யப்படும். வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுவதற்கான கடைசி நாள் 07.12.2017. வேட்புமனு தாக்கலின் போது வேட்பாளரைச் சேர்த்து 5 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்கள். மேலும் வேட்பாளருடன் வரும் வாகனங்கள் எணிக்கை 3 மட்டும் 100 மீட்டர் உட்பட்ட பகுதியில் அனுமதிக்கப்படும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**